# அரையாண்டுத் தேர்வு - 2022

**10 - ஆம் வகுப்பு** **தமிழ்** பதிவு எண். | | | | |

காலம் : 3.00 மணி மதிப்பெண்கள் : 100

## பகுதி – I

**I) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** **15 X 1 = 15**

1. வேர்க்கடலை, மிளகாய் விதை, மாங்கொட்டை ஆகியவற்றைக் குறிக்கும் பயிர்வகை ..................
அ) குலை வகை ஆ) மணி வகை இ) கொழுந்துவகை ஈ) இலைவகை
2. 'பாடுஇமிழ் பனிக்கடல் பருகி' என்னும் முல்லைப்பாட்டு அடி உணர்த்தும் அறிவியல் செய்தி யாது?
அ) கடல் நீர் ஆவியாகி மேகமாதல் ஆ) கடல் நீர் குளிர்ச்சி அடைதல்
இ) கடல் நீர் ஒலித்தல் ஈ) கடல் நீர் கொந்தளித்தல்
3. அறிஞருக்கு நூல், அறிஞரது நூல் ஆகிய சொற்றொடர்களில் பொருளை வேறுபடுத்தக் காரணமாக அமைவது ..................
அ) வேற்றுமை உருபு ஆ) எழுவாய் இ) உவம உருபு ஈ) உரிச்சொல்
4. பெருமாள் திருமொழி நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்தில் .................. திருமொழியாக உள்ளது.
அ) மூன்றாம் ஆ) நான்காம் இ) ஐந்தாம் ஈ) ஆறாம்
5. பாரத ஸ்டேட் வங்கியின் உரையாடு மென்பொருள் எது?
அ) துலா ஆ) சீலா இ) குலா ஈ) இலா
6. இடைக்காடனாரின் பாடலை இகழ்ந்தவர் .................. இடைக்காடனாரிடம் அன்பு வைத்தவர் ..................
அ) அமைச்சர், மன்னன் ஆ) அமைச்சர், இறைவன் இ) இறைவன், மன்னன் ஈ) மன்னன், இறைவன்
7. முன்பனிக் காலம் என்பது .................. மாதங்கள் நிலவும்.
அ) ஆவணி, புரட்டாசி ஆ) ஐப்பசி, கார்த்திகை இ) மார்கழி, தை ஈ) மாசி, பங்குனி
8. ம.பொ.சிவஞானத்தின் எனது போராட்டம் என்னும் நூல் .................. வகையைச் சார்ந்தது.
அ) வரலாற்று நூல் ஆ) தன்வரலாற்று நூல் இ) ஆய்வு நூல் ஈ) பயணவகை நூல்
9. உலகமே வறுமையுற்றாலும் கொடுப்பவன் என்றும், பொருள்களின் இருப்பைக்கூட அறியாமல் கொடுப்பவன் என்றும் பாராட்டப்படுவோர் ..................
அ) உதியன்;சேரலாதன் ஆ) அதியன்; பெருஞ்சாத்தன்
இ) பேகன்; கிள்ளிவள்வன் ஈ) நெடுஞ்செழியன்; திருமுடிக்காரி
10. சரியான அகர வரிசையைத் தேர்ந்தெடுக்க.
அ) உழவு, மண், ஏர், மாடு ஆ) மண், மாடு, ஏர், உழவு இ) உழவு, ஏர், மண், மாடு ஈ) ஏர், உழவு, மாடு, மண்
11. "இவள் தலையில் எழுதியதோ கற்காலம்தான் எப்போதும்" – இவ்வடிகளில் கற்காலம் என்பது
அ) தலைவிதி ஆ) பழைய காலம் இ) ஏழ்மை ஈ) தலையில் கல் சுமப்பது

பாடலைப் படித்து பின்வரும் வினாக்களுக்கு (12,13,14,15) விடை தருக.

"விசும்பில் ஊழி ஊழ் ஊழ் செல்லக்
கருவளர் வானத்து இசையில் தோன்றி
உரு அறிவாரா ஒன்றன் ஊழியும்
உந்து வளி கிளர்ந்த ஊழி ஊழ் ஊழியும்"

12. இப்பாடல் இடம் பெற்றுள்ள நூல் எது?
அ) பெருமாள் திருமொழி ஆ) பரிபாடல் இ) நீதி வெண்பா ஈ) மெய்கீர்த்தி
13. இப்பாடலின் ஆசிரியர் ..................
அ) கீரந்தையார் ஆ) பூதஞ்சேந்தனார் இ) நப்பூதனார் ஈ) குலசேகராழ்வார்
14. ஊழ் ஊழ் இலக்கணக் குறிப்பு ..................
அ) இரட்டைக்கிளவி ஆ) பண்புத்தொகை இ) அடுக்குத்தொடர் ஈ) வினைத்தொகை
15. ஊழி – பொருள் தருக.
அ) வானம் ஆ) யுகம் இ) முறை ஈ) சிறப்பு

## பகுதி – II

### பிரிவு–1

**எவையேனும் 4 வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.** **4 X 2 = 8**
**வினா எண் 21க்கு கட்டாயமாக விடையளிக்கவும்.**

16. 'இறடிப் பொம்மல் பெறுகுவிர்' – இத்தொடர் உணர்த்தும் பொருளை எழுதுக.
17. விடைகளுக்கேற்ற வினாக்கள் அமைக்க.
அ) ஒரு மொழியில் உணர்த்தப்பட்டதை வேறொரு மொழியில் வெளியிடுவது மொழிபெயர்ப்பு.
ஆ) இந்தியா 1947 ஆகஸ்ட் பதினைந்தாம் நாள் விடுதலை பெற்றது.

18. பெற்றோர் வேலையிலிருந்து திரும்பத் தாமதமாகும்போது அழும் தம்பிக்கு நீங்கள் கூறும் ஆறுதல் சொற்களை எழுதுக.
19. வறுமையிலும் படிப்பின்மீது நாட்டம் கொண்டவர் ம.பொ.சி என்பதற்குச் சான்று தருக.
20. 'வாழ்வில் தலைக்கனம்', 'தலைக்கனமே வாழ்வு' என்று நாகசாமி யாருடைய வாழ்வைக் குறித்துக் கூறுகிறார்?
21. 'முயற்சி' எனத் தொடங்கும் திருக்குறளை எழுதுக.

## பிரிவு–2

**எவையேனும் 5 வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.** **5 X 2 = 10**

22. எண்ணுப்பெயர்களைக் கண்டு, தமிழ் எண்களில் எழுதுக.
அ) எறும்புந்தன் கையால் எண்சாண் ஆ) நாலும் இரண்டும் சொல்லுக்கு உறுதி
23. பழமொழிகளை நிறைவு செய்க.
அ) ஒரு பானை .............. ஆ) அளவுக்கு ..............................
24. பொறித்த – பகுபத உறுப்பிலக்கணம் தருக.
25. கொடுக்கப்பட்டுள்ள இரு சொற்களைப் பயன்படுத்தி ஒரு தொடர் அமைக்க.
அ) இயற்கை–செயற்கை ஆ) விதி – வீதி
26. கலைச்சொற்கள் தருக.
அ) Emblem ஆ) Document
27. தொடரில் விடுபட்ட வண்ணங்களை உங்களின் எண்ணங்களால் நிரப்புக.
அ) .................... மனம் உள்ளவரை அப்பாவி என்கிறோம்.
ஆ) வெயிலில் அலையாதே; உடல் ......................
28. ஊர்ப்பெயர்களின் மரூஉவை எழுதுக.
அ) உதகமண்டலம் ஆ) திருநெல்வேலி

## பகுதி III (பிரிவு –1)

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கும் மட்டும் சுருக்கமாக விடையளிக்க.** **2 X 3 = 6**

29. 'புளியங்கன்று ஆழமாக நடப்பட்டுள்ளது'. அதுபோல் இளம் பயிர் வகை ஐந்தின் பெயர்களைத் தொடர்களில் அமைக்க.
30. உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.
மொழிபெயர்ப்பினால் புதிய சொற்கள் உருவாகி மொழிவளம் ஏற்படுகிறது. பிற இனத்தவரின் பண்பாடு, நாகரிகம், பழக்க வழக்கம் போன்றவற்றை அறிய முடிகிறது. பிறமொழி இலக்கிய அறிவு கிடைக்கிறது. கருத்துப் பகிர்வைத் தருவதால் மொழிபெயர்ப்பைப் பயன்கலை என்று குறிப்பிடுவார்கள்.
அ) பயன்கலை என்று எதனைக் குறிப்பிடுகிறார்கள்?
ஆ) மொழிபெயர்ப்பின் நன்மைகள் இரண்டினை எழுதுக?
இ) இப்பத்திக்கு ஏற்ற தலைப்பு யாது?
31. சங்க இலக்கியங்கள் காட்டும் அறங்கள் இன்றைக்கும் தேவையானவையே என்பதற்குச் சில எடுத்துக்காட்டுகள் தருக.

## பிரிவு–2

**எவையேனும் இரண்டிற்கு மட்டும் விடையளிக்க.** **2 X 3 = 6**
**வினா எண் 34–க்கு கட்டாயமாக விடையளிக்க வேண்டும்.**

32. "மாளாத காதல் நோயாளன் போல்" என்னும் தொடரிலுள்ள உவமை சுட்டும் செய்தியை விளக்குக.
33. வைத்தியநாதபுரி முருகன் குழந்தையாக அணிந்திருக்கும் அணிகலன்களுடன் செங்கீரை ஆடிய நயத்தை விளக்குக.
34. "சிறுதாம்பு தொடுத்த" – எனத் தொடங்கும் முல்லைப்பாட்டுப் பாடல். (அல்லது)
"மாற்றம் எனது" – எனத் தொடங்கும் காலக்கணிதப் பாடல்.

## பிரிவு–3

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.** **2 X 3 = 6**


35. வினா வகைகளை எடுத்துக்காட்டுடன் விளக்குக.
36. கவிஞர் தாம் கூற விரும்பும் கருத்திற்கு ஏற்றவாறு தற்குறிப்பேற்ற அணி அமைவதை எடுத்துக்காட்டுக.
37. அறனீனும் இன்பமும் ஈனும் திறனறிந்து
தீதின்றி வந்த பொருள். – இக்குறட்பாவினை அலகிட்டு வாய்பாடு தருக.

## பிரிவு–IV

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** **5 X 5 = 25**

38. அ) முல்லைப்பாட்டில் உள்ள கார்காலச் செய்திகளை விவரித்து எழுதுக. (அல்லது)
ஆ) சிலப்பதிகார மருவூர்ப்பாக்க வணிக வீதிகளை இக்கால வணிக வளாகங்களோடும் அங்காடிகளோடும் ஒப்பிட்டு எழுதுக.
39. அ) உணவு விடுதியொன்றில் வழங்கப்பட்ட உணவு தரமற்றதாகவும் விலை கூடுதலாகவும் இருந்தது குறித்து உரிய சான்றுகளுடன் உணவுப் பாதுகாப்பு ஆணையருக்குக் கடிதம் எழுதுக. (அல்லது)
ஆ) நாளிதழ் ஒன்றின் பொங்கல் மலரில் 'உழவுத் தொழிலுக்கு வந்தனை செய்வோம்' என்ற உங்கள் கட்டுரையை வெளியிட வேண்டி அந்நாளிதழ் ஆசிரியருக்குக் கடிதம் எழுதுக.

40. காட்சியைக் கவிதையாக்குக.



41. அ) நாம் பின்பற்ற வேண்டிய அறங்களும் அதனால் ஏற்படும் நன்மைகளும் – என்ற தலைப்பில் ஐந்து அறங்களை எழுதுக. (அல்லது)

ஆ) மொழி பெயர்க்க.

## Koothu

Therukoothus is, as its name indicates, a popular form of theatre performed in the streets. It is performed by rural artists. The stories are derived from epics like Ramayana, Mahabharatha and other ancient puranas. There are more songs in the play with dialogues improvised by the artists on the spot. Fifteen to twenty actors with a small orchestra forms a koothu troupe. Though the orchestra has a singer, the artists sing in their own voices. Artists dress themselves with heavy costumes and bright makeup. Koothu is very popular among rural areas.

**செவிமாற்றுத் திறனாளர்களுக்கான மாற்று வினா. உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.**

பிறருக்கு உதவுதல் என்பதைச் சிறந்த அறமாகச் சங்க இலக்கியங்கள் காட்டுகின்றன. உதவி செய்தலை ஈழத்துப் பூதன் தேவனார் 'உதவியாண்மை' என்று குறிப்பிடுகிறார். தன்னைத் தாண்டிப் பிறரைப் பற்றிச் சிந்திக்கும்போது, இருக்கும் நிலையை ஒதுக்கி, தான் இருக்க வேண்டிய நிலை எது என்பதை மனிதன் உணர்கிறான் எனலாம். அன்பு என்ற சுடருக்குத் தியாகம் தானே எண்ணெயாக இருக்க முடியும்? பிறர் துன்பத்தைத் தம் துன்பமாகக் கருதி உதவுதல் சான்றோர்க்குக் கடன் என்கிறார் நல்லந்துவனார். அவ்வாறே உண்மையான செல்வம் என்பது பிறர் துன்பம் தீர்ப்பதுதான் என்கிறார் நல்வேட்டனார்.

i) அன்பு என்னும் சுடருக்கு எண்ணெயாக இருப்பது எது? ii) சிறந்த அறமாகச் சங்க இலக்கியங்கள் எதைக் காட்டுகின்றன? iii) உண்மையான செல்வம் எது? iv) உதவியாண்மை என்றால் என்ன? v) நல்லந்துவனார் கருத்து யாது?

---

42. வீட்டு எண் : 06, கரிகாலன் தெரு, தஞ்சாவூர் மாவட்டத்தில் வசிக்கும் பாரி என்பாரின் மகள் சங்கவை மேல்நிலை வகுப்பில் சேர விரும்புகிறார். இந்த விவரங்களைக் கொண்டு உரிய படிவத்தினை பூர்த்தி செய்க. (குறிப்பு : கொடுக்கப்பட்ட படிவத்தின் மாதிரியை எழுதி பூர்த்தி செய்யவும்.)

**மேல்நிலை வகுப்பு – சேர்க்கை விண்ணப்பம்**

சேர்க்கை எண் : நாள் : வகுப்பும் பிரிவும் :

1. மாணவ / மாணவியின் பெயர் ..........
2. பிறந்த நாள் ..........
3. தேசிய இனம் ..........
4. பெற்றோர் / பாதுகாவலர் பெயர் ..........
5. வீட்டு முகவரி ..........
6. இறுதியாகப் படித்து முடித்த வகுப்பு ..........
7. பயின்ற மொழி ..........
8. பெற்ற மதிப்பெண்கள் ..........
9. இறுதியாகப் படித்த பள்ளியின் முகவரி ..........

| தேர்வின் பெயர் | பதிவு எண் – ஆண்டு | பாடம் | மதிப்பெண் (100) |
|---|---|---|---|
| | | தமிழ் | |
| | | ஆங்கிலம் | |
| | | கணிதம் | |
| | | அறிவியல் | |
| | | சமூக அறிவியல் | |
| | | மொத்தம் | |

10. மாற்றுச் சான்றிதழ் இணைக்கப்பட்டுள்ளதா?
11. தாய்மொழி
12. சேர விரும்பும் பாடப் பிரிவும் பயிற்று மொழியும்

மாணவ / மாணவியின் கையெழுத்து

## பகுதி–V (மதிப்பெண்கள் : 24)

அனைத்து வினாக்களுக்கும் விரிவான விடையளிக்கவும். **3 X 8 = 24**

43. அ) உங்கள் இல்லத்துக்கு வந்த உறவினருக்கு நீங்கள் செய்த விருந்தோம்பலை அழகுற விவரித்து எழுதுக.

(அல்லது)

ஆ) ஜெயகாந்தன் நினைவுச் சிறப்பிதழ் வார இதழ் ஒன்று வெளியிட இருக்கிறது. அதற்கான ஒரு சுவரொட்டியை வடிவமைத்து அளிக்க.

44. அ) 'கற்கை நன்றே கற்கை நன்றே
பிச்சை புகினும் கற்கை நன்றே' என்கிறது வெற்றிவேற்கை.
மேரியிடமிருந்து பறிக்கப்பட்ட புத்தகம், அச்சிறுமியின் வாழ்க்கையில் கல்விச் சுடரை ஏற்றிய கதையைப் பற்றிய உங்களின் கருத்துகளை விவரிக்க.

(அல்லது)

ஆ) இராமானுசர் நாடகத்தை சுருக்கி வரைக.

45. அ) 'சான்றோர் வளர்த்த தமிழ்' – என்னும் தலைப்பில் கட்டுரை எழுதுக.

(அல்லது)

ஆ) உங்கள் பகுதியில் நடைபெற்ற அரசுப் பொருட்காட்சிக்குச் சென்று வந்த நிகழ்வைக் கட்டுரையாக்குக.

---